1970 மார்ச் 5]

திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி நிலைமைகள் மாயூரத்தில் மட்டுமல்லாது மாநிலம் பூராவும் பல இடங்களில் கூட்டுறவுத் துறையில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட மோசடிகளிலே ஈடுபடுகின்றவர்களுக்கு அதிகமான தண்டனை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: கூட்டுறவுச் சங்கங்களில், மாயூரத்தில் மட்டுமல்லாது, தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாது, பல மாவட்டங்களிலும் தவறுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகளைச் சற்று அதிகப்படுத்தியிருக்கிறோம். முன்னல் தமிழ்நாடு ஐந்து வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்போது இன்னும் இரண்டு கூட்டுப் பதிவாளர் (ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார்) அதிகமாக நியமிக்கப்பட்டு, மேலும் நன்ருகக் கண்காணித்து வரும் அளவுக்கு ஐந்து வட்டங்களாக இருந்தது ஏழாகப் பெருக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் கேள்வி கேட்கும்போது என்று குறிப்பிட்டார்கள். அதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. பத்திரிகை நிருபர்கள் பக்கம் பார்த்துச் சொல்லிவிட்டேன். எப்படியும் நீங்கள் கேட்டது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ப. மகாதேவன்: சட்டசபைக் குறிப்புகளில் நீக்கும்படியான * என்பது கன்னித் தமிழும் கவின் மலையாளமும் கொண்ட பகுதியிலிருந்து வந்த எனக்குப் புரியாததால் அதற்கு அர்த்தம் என்ன என்று விளக்குவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியே போய் விளக்கிக் கொள்ளலாம்.

திரு. மு. கந்தசாமி படையாச்சி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம் கேள்வி நேரம் முடிந்த பிறகு கேளுங்கள்.

நேமூர் கூட்டுறவு விவசாய வங்கி

■225 வினு—**திரு. மு. இராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நேமூர் கூட்டுறவு விவசாய வங்கியில் நிதியைக் கையாடல் செய்திருப்பதாகப் புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

Hindu Temples

* 226 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there are proposals under the consideration of the Government to throw open the Hindu temples to communities other than Hindus?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம். தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அமைதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளைச் சேர்ந்த விதி 3( ), இந்துக்களல்லாதவர்கள் இந்து கோயில்களில் உட்புறத்திலோ அல்லது அவற்றிற்கு வெளியிலோ அமைந்துள்ள ஓர் இடத்திற்குச் செல்வதற்கும், அல்லது இறைவழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கின்றது. தமிழ்நாடு அரசு இப்போது இவ்விதியை நீக்கி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்து மதத்தின் புனிதமான தன்மையில் நம்பிக்கை கொண்டு ஆலயங்கள் எவ்வாறு நடத்தப்படவேண்டும், அங்கு எவ்வாறு ஆராதிக்கப்படவேண்டும் என்பவை போன்ற விதிகளை நன்கு அறிந்து அதில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்குத் தரிசனம் செய்வதற்கு அனுமதி கொடுக்கலாம் தீண்டாமையை ஒழிக்கக்கூடிய காலத்தில் என் மாதிரிப்பட்டவர்கள் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிப்பதுதான் உண்மையான இந்துமதம் என்பதை ஒப்புக்கொண்டோம். ஆலயங்களுக்கு எந்த மதஸ்தர்கள் வந்தாலும்சரி, இந்த விதிகளை நன்கு அறிந்து அதற்கு மரியாதை செய்து ஒரு கட்டுப்பாடோடு நடந்து கொள்வார்கள் என்றால் எந்த மதஸ்தர்களுக்கும் தரிசனம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்து மதத்தின் புனிதத்தன்மை காப்பாற்றப்படவேண்டுமென்று சொன்னார்கள். எம்மதமும் சம்மதம்தான் என்பது தான் ஒவ்வொரு மதத்தின் புனிதத்தன்மையாக இருக்கவேண்டும் என்பது இந்த அரசின் கருத்தாகும்.